1970 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கங்கே இருக்கிற பிரச்சினையைப் பொறுத்து குடியேற்றும் நிலைமைகள் இருக்கின்றன. பர்மா அகதிகளுக்கு அங்கு வாய்ப்பு இருக்குமானால் யோசனை செய்யலாம்.

திரு. கே. விநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர் பாடியிலே மிகவும் தாழ்வான இடத்திலேதான் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மைதான். சென்னையிலே மிகவும் இட நெருக்கடி இருக்கிறது. அதனால் எங்கெங்கே இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கட்டிக்கொள்ளுகிறார்கள். மத்திய சர்க்காரிடம் இருந்து பணம் வந்தால் அதைக் கார்ப்பரேஷனிடம் கொடுத்தால் பல நாட்கள் ஆகும். முதலிலே அவர்களுக்கு ரோடுகள் வேண்டும், பிறகு வீடுகள், அதற்குப் பிறகு குடிநீர் வசதி ஆகியவைகளைச் செய்து கொடுக்க வேண்டும். இவைகள் "இன்டர் மிக்ஸட் பிராப்ளம்". ஆகவே, இதை பி.டபிள்யூ.டி.-யிடம் கொடுத்தால் 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள்ளாக முடித்துவிடுவார்கள். இப்படிப் பட்ட யோசனை இந்த அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கே திரு. விநாயக மூர்த்தி, இங்கே திரு. விநாயகம். அவர்கள் என்னவென்றால் அரசாங்கம் கார்ப்பரேஷனிலே தலையிடுகிறது என்கிறார்கள். இவர்கள் என்னவென்றால் கார்ப்பரேஷனிடம் கொடுக்காதே என்று சொல்லுகிறார்கள். கார்ப்பரேஷன் மட்டுமல்ல இதைச் செய்வது. எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டிய பிரச்சினை. நான் டெல்லி சென்றிருந்த நேரத்திலே டெல்லி அமைச்சர் திரு. பகூஷா ஆசாத் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்தான் இத்துறையின் பொறுப்பில் இருக்கிறார்கள். இந்த 3 கோடி ரூபாய் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் விதைப்பண்ணைகள்

*217. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் தற்போது எத்தனை அரசாங்க விதைப் பண்ணைகள் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோயம் புத்தூர் மாவட்டத்தில் தற்போது 6 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 விதைப் பண்ணைகளில் எவ்வளவு விதைகள் சேகரிக்கப்பட்டிருக் கின்றன? இந்த விதைப் பண்ணைகளை அதிகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இந்த 6 விதைப் பண்ணைகளிலிருந்து எவ்வளவு சேகரிக்கப் பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. ஆறு விதைப் பண்ணைகளும்

லாபமாகத்தான் இருக்கின்றன. ஒவ்வொரு விதைப் பண்ணையிலும் இன்றைக்கு அதிகமான லாபம் அரசாங்கம் பெற்றிருக்கிறது. இதிலிருந்து அதிகப்படியான லாபம் பெற்றிருக்கிறோம் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கிற கண்ணம்பாளையத்தில் இருக்கின்ற விதைப் பண்ணைக்கு தண்ணீர் பற்றுக்குறை இருக்கிறது. கண்ணம்பாளையக் குளத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்டுவதற்கு தீர்மானம் இருந்தது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இல்லை. இது குறித்து இப்போது தகவல் இல்லை. கண்ணம்பாளையம் விதைப் பண்ணையில் இருந்து 7,428 ரூபாய் லாபம் வந்திருப்பதாக 1968–69 ஆண்டு கணக்குக் காட்டுகிறது. தனியாக கால்வாய் அபிவிருத்தி பற்றி எந்தவித குறிப்பும் இல்லை.

ஆடுதுறை விவசாயப் பண்ணைக் கட்டடங்கள்.

*218 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஆடுதுறையில் தற்போது காலியாக உள்ள அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டடங்களை சுற்றுலா மாளிகையாக ஆக்க ஏதேனும் திட்டம் தற்போது அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

ஆடுதுறையிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது எந்தக் கட்டிடமும் காலியாக இல்லை. அங்குள்ள கட்டடத்தைச் சுற்றுலா மாளிகையாக்கும் திட்டம் தற்போது இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஆடுதுறையிலே விதைப்பண்ணைகளுக்கு கட்டடம் கட்டுவதாகச் சொன்னார்கள். கட்டடம் கட்டிவிட்டால் மட்டும் போதாது. கட்டடம் கட்டிய பிறகு விதைகளில் கலப்பு இருப்பதைப் பிரிக்கக்கூடிய கருவியும் இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. இது ஆடுதுறை விதைப் பண்ணையைப்பற்றிய கேள்வியல்ல. கோவை மாவட்ட விதைப்பண்ணையைப் பற்றியது. கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்த கட்டடத்தை சுற்றுலா மாளிகையாக ஆக்க வேண்டுமென்ற திட்டம் உண்டா என்று கேட்டார்கள். இல்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. எல். கணேசன் : ஆடுதுறை விதைப்பண்ணையை மேல் நாட்டு மாணவர்களும், அண்டை மாநிலங்களில் உள்ள மாணவர்களும் வேளாண்மைத் துறையைப் பற்றி ஆராய்வதற்காக அடிக்கடி வந்து